புதிய அவையம்
PUTHIYA AVAIYAM
A Peer-reviewed Journal & Bilingual Journal for Arts and Humanities
UGC Approved Journals
ISSN: 2456-821X
Vol:07, Issue: 02 கட்டுரை ஏற்றுக்கொள்ளப்பட்டது மே 2023 – வெளியிடப்பட்டது ஜூன் 2023
June-2023
SACRED HEART RESEARCH PUBLICATIONS

# சிலப்பதிகாரத்தில் சித்த மருத்துவக் கோட்பாடு பற்றிய சான்றுகள்

மரு. வ. இலக்கியா,
இணை ஆராய்ச்சியாளர், சித்த மருத்துவ ஆராய்ச்சி பிரிவு,பெங்களூரு, கர்நாடகா, இந்தியா.

மரு. சி. ஈஸ்வரன்,
இணை ஆராய்ச்சியாளர், சித்த மருத்துவ ஆராய்ச்சி பிரிவு, பெங்களூரு, கர்நாடகா, இந்தியா.

மரு. ரெ. மாணிக்கவாசகம்,
ஆராய்ச்சி அலுவலர், சித்த மருத்துவ ஆராய்ச்சி பிரிவு, பெங்களூரு, கர்நாடகா,இந்தியா.

மரு. மு. கண்ணன்,
ஆராய்ச்சி அலுவலர்- விஞ்ஞானி- III, சித்த மருத்துவ ஆராய்ச்சி பிரிவு, பெங்களூரு, கர்நாடகா, இந்தியா.

ஆய்வுச்சுருக்கம்

ஐம்பெருங்காப்பியங்களில் ஒன்றான சிலப்பதிகாரம், இளங்கோ அடிகளால் எழுதப்பட்டது. இவர் புகழ்பெற்ற சேர மன்னனான சேரன் செங்குட்டுவனின் தம்பி ஆவார். சிலப்பதிகாரம் - சிலம்பு + அதிகாரம். சிலம்பு என்பது சங்ககால மக்களால் இரண்டு கால்களிலும் அணியப்பட்ட அணிகலன், அதிகாரம் என்பது இயல் அல்லது நூற்கூறுபாடு; சிலம்பு காரணமாக விளைந்த கதை என்பதால் இப்பெயர் பெற்றது. பொ.ஊ. (AC) இரண்டாம் நூற்றாண்டில் எழுதப்பட்டதும், குடிமகனை பாட்டுடைத் தலைவனாகக் கொண்ட சிலப்பதிகாரம் கண்ணகி, கோவலன் சரித்திரத்தை மட்டும் விரித்துக் கூறாமல், அக்காலத்து தமிழ் மக்களின் வாழ்க்கை, ஒழுக்கம் மற்றும் பண்பாடு, மூவேந்தருடைய தலைநகரங்களான புகார் (காவிரிப்பூம்பட்டினம்), மதுரை, வஞ்சி என்னும் மூன்றின் பெருமைகளையும், ஊர்கள், மலைகள், ஆறுகள், பொய்கைகள், கோயில்கொண்ட தெய்வங்கள், புலவர்கள் என அனைத்தையும் குறிப்பிடுகிறது. சிலப்பதிகாரத்திற்கு அரும்பத உரையாசிரியரைத் தழுவி அடியார்க்கு நல்லார் உரை எழுதியுள்ளார். தமிழ் மருத்துவ முறையான சித்த மருத்துவத்தைச் சித்தர்கள் தங்கள் அருள் ஞான அறிவால் நன்குணர்ந்து மிகவும் துல்லியமாகக் கூறிப் போந்தனர். சங்க இலக்கியங்கள் பலவற்றில் சித்த மருத்துவத்தின் அடிப்படையான தத்துவத்திற்கான சான்றுகள் உள்ளன. தொல்காப்பியத்தில் உடற்கூறு மற்றும் அறுவை மருத்துவம் பற்றிய சான்றுகள் கிடைக்கபெற்று உள்ளது. சிலப்பதிகாரத்தினுள் சித்தன் என்ற சொல் பற்றிய குறிப்பும், அகத்தியமுனி மற்றும் சித்த மருத்துவத்தின் அடிப்படை தத்துவம் முதலியவற்றின் ஆதாரங்களை காண்பதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

கலைச்சொற்கள் - சிலப்பதிகாரம், சித்தன் , அகத்தியர் , தத்துவங்கள், சித்த மருத்துவம்

## முன்னுரை

"நெஞ்சை அள்ளும் சிலப்பதிகாரம்" எனப் பாரதியாரால் போற்றப்பட்டதும், தமிழின் முதல் காப்பியம், முதன்மை காப்பியம், முத்தமிழ் காப்பியம், மூவேந்தர் காப்பியம் என்ற வேறு பெயர்களாலும், 5001 அடி, 30 காதைகள், 3 காண்டங்கள் கொண்டதுமான சிறப்பு மிக்கது சிலப்பதிகாரம். சித்த மருத்துவம் எப்போது தோன்றியது என்று வரையறுத்துக் கூறவியலாது எனினும் 10000 ஆண்டுகளுக்கு முற்பட்டது என்ற கருத்தும் உண்டு. பொ.ஊ.மு ஆறாம் நூற்றாண்டிற்கு முந்திய நூல்கள் செவ்வியல் நூல்கள் என வரையறுக்கப்பட்டன. சித்த மருத்துவம் பற்றிய குறிப்புகள் செவ்வியல் நூல்கள் வரிசையில் தொல்காப்பியம், சிலப்பதிகாரம்,

அகநானூறு, புறநானூறு, திருமந்திரம் போன்ற நூல்களில் குறிப்பிடப்பட்டுள்ளது. அவ்வாறு சிலப்பதிகாரத்தில் சித்த மருத்துவ அடிப்படை தத்துவங்களின் சான்றுகளை காணுவதே இக்கட்டுரை விளக்க முற்படுகிறது.

சித்தன் பற்றிய குறிப்புகள்

"அறிவன் அறவோன் அறிவுவரம்பு இகந்தோன்
செறிவன் சினேந்திரன் சித்தன் பகவன்
தருமமுதல்வன் தலைவன் தருமன்
பொருளன் புனிதன் புராணன் புலவன்
சினவரன் தேவன் சிவகதி நாயகன்
பரமன் குணவதன் பரத்தில் ஒளியோன்
தத்துவன் சாதுவன் சாரணன் காரணன்
சித்தன் பெரியவன் செம்மல் திகழொளி –
இறைவன் குரவன் இயல்குணன் எங்கோன்
குறைவில் புகழோன் குணப்பெருங் கோமான்
சங்கரன் ஈசன் சயம்பு சதுமுகன்
அங்கம் பயந்தோன் அருகன் அருள்முனி
பண்ணவன், என்குணன். பாத்தில் பழம்பொருள்
விண்ணவன் வேத முதல்வன்"

சித்தன் என்பதற்கு விளக்கமாக நாடுகாண்காதையில் மதுரைப் பயணத்தின் போது கவுந்தியடிகள் அருகனைப் போற்றுகின்றபோது, 48 பெயர்களைக் குறிப்பிடுகின்றார். அதில் சித்தன் என்ற பெயரும் ஒன்று. சித்தன் என்னும் சொல் "செய்ய வேண்டுவனவற்றைச் செய்து முடித்தவன், கன்மங்களைக் கழுவினவன், எண்வகை சித்திகளையும் உண்டாக்கியவன்" எனப் பொருள் எடுத்துரைக்கிறது. சித்த மருத்துவத்தில் மனம், புத்தி, சித்தம் என்ற அந்தக்கரணங்களை ஒன்றிக்கவல்ல திறமையுடையவர்கள் சித்தர்கள் என்றழைக்கப்படுவர். அவர்கள் நிலைத்திருக்கும் மெய்யறிவாகிய பேரறிவு படைத்தவர்கள்.

அகத்தியர் பற்றிய குறிப்புகள்

சித்தர்களில் முதன்மையாகத் திகழ்பவர் அகத்தியமுனிவர். மருத்துவ நூல்களை எழுதிய சித்தர்கள் அவை பரமசிவனிடமிருந்து நந்தி வழியாகவும் அவரிடமிருந்து அகத்தியர்,புலத்தியர் முதலிய சித்தர்கள் வழியாகவும் தமக்கு கிடைத்தனவென்று எழுதியிருக்கின்றனர். இவர் பொதிகை மலைக்கு வந்து இன்றும் அடியார்களுக்குத் திருவருள் பாலித்து வருகிறார் எனப் பல நூல்கள் குறிக்கின்றது. இவர் பல சித்த மருத்துவ நூல்களை இயற்றியுள்ளார். சித்தர் நூல்கள் பலவற்றில் வண்டமிழ் மாமுனி, கும்ப மாமுனி, சந்தநூல் தமிழ்தந்தவர், குறியோன், பைந்தமிழ் முனிவன், அறிவன், முத்தண்டமிழ் தேர்முனி, தமிழ்நர் கோமகன், ஆதிமுனி என புகழ் பெற்றிருக்கிறார் அகத்தியர்.

"தெய்வ மால்வரைத் திருமுனி யருள
வெய்திய சாபத் திந்திர சிறுவனொடு
தலைக்கோற் றானத்துச் சாப நீங்யெ
மலைப்பருஞ் சிறப்பின் வானவர் மகளிர்
சிறப்பிற் குன்றாச் செய்கையொடு பொருந்திய
பிறப்பிற் குன்றாப் பெருந்தோள் மடந்தை
தாதவிழ் புரிகுழல் மாதவி தன்னை"

- அரங்கேற்றுகாதை

நாடகக் கலையில் சிறந்து விளங்கும் மாதவியை அரங்கேற்று காதையில் அறிமுகப் படுத்துகின்றார் , அவள் ஊர்வசியின் மரபினள் என்று குறிப்பிடுகிறார். மேலும் இதில் இந்திரன் குமாரனாகிய சயந்தன் மற்றும் அரம்பையர் வரிசையில் முதன்மை பெற்ற ஊர்வசியின் சாபவரலாற்றைச் சுருங்க உரைக்கிறார். தெய்வத் தன்மை உடைய பெரிய மலையாகிய பொதியமலையின்கண் உள்ள அகத்திய முனிவனிடம் ஊர்வசி-சயந்தன் சாபம் பெற்றதும், பின் அவன் அருளால் சாபம் நீங்கியதும் ஆகிய செய்திகளே அறியப்படுகின்றன. பிறப்பில் குன்றுதல்

இல்லாதவளும், பெரிய தோளையுடையவளும், மடந்தையாகிய, தாதுவிரியும் பூக்களை அணிந்த சுருண்ட கூந்தலையுடைய மாதவி என மாதவியை அறிமுகப்படுத்தும் பாக்களில் அகத்தியர் பற்றிய குறிப்பு உள்ளது.

"மாதவ முனிவன் மலை வலங்கொண்டு
குமரியம் பெருந்துறைக் கொள்கையின் படிந்து
தமர் முதற் பெயர்வோன் தாழ் பொழிலாங்கண்,
வருந்து செல்வருத்தத்து வான்றுயர் நீங்கக்
கவுந்தி இடவறின் புகுந்தோன் தன்னைக்
கோவலன் சென்று சேவடி வணங்க"

- அடைக்கலக் காதை

மாடலன் என்னும் அந்தணன் மிக்க தவத்தினையுடைய அகத்திய முனிவனுடைய பொதிய மலையை வேண்டி வணங்கி, குமரிக்கடலில் புனித நீராடி தன்னுடைய ஊரை நோக்கித் திரும்பும் வழியில் மதுரையை அடைந்தான். வழிநடந்த களைப்புத் தீர அவன் நிழல் படிந்த சோலையுள்ள பள்ளியிடத்துச் சென்றான். ஆங்குக் கவுந்தியடிகள் இருக்கக் கண்டு வணங்கினான். அம்மறையவனைக்கண்ட கோவலனும் அவனை வணங்கித் தொழுதான் என்ற குறிப்பு உள்ளது.

இவ்வாறு அகத்திய முனிவரைப் பல இடங்களில் குறிப்பிடுவதைக் காணக்கிடைக்கிறது. மேலும் புலவரில் முதன்மையாக அகத்தியரை குறிப்பிடுகின்றனர்.

தத்துவங்கள் தொண்ணூற்றாறு

சித்த மருத்துவத்திற்கு அடிப்படையானது தொண்ணூற்றாறு தத்துவங்கள். கருவின் மூலமாக அல்லது உயிர் தோற்றம் மூலமாக ஏற்பட்டது 96 தத்துவங்கள். உடம்பிற்குள் 96 வகையான வேதியியல் தொழில்கள் நடைபெறுகின்றன என்ற அறிவியலை பல நூறு ஆண்டுகளுக்கு முன்னரே அறிந்தவர்கள் சித்தர்கள். அதில் ஐம்பூதங்கள், ஐம்பொறிகள், ஐம்புலன்கள், தசவாயுக்கள், தசநாடிகள், ஆறு ஆதாரங்கள் அடங்கும்.

உலகத்திலுள்ள பொருட்கள் யாவும் ஐம்பூதமயமானவை என்பது சித்த மருத்துவ தத்துவ நூல்களின் வாயிலாய் நாம் அறியக்கிடக்கின்றது.

பஞ்சபூதங்கள், ஐம்பொறிகள், ஐம்புலன்கள் பற்றிய குறிப்புகள்

சிலப்பதிகாரம், கானல்வரி உரையில் அரும்பதவுரையாசிரியர் காட்டிய நூற்பாக்கள் பின்வருமாறு,

''பூதமுதற் சாதனத்தாம் புற்கலத்தின் மத்திமத்து
நாதமுதலா மெழுத்து நாலாகி - வீதி
வருவரத்தாற் றானத்தால் வந்து வெளிப்பட்
டிருவாத்தாற் றோற்ற மிசைக்கு''.

அதாவது புற்கலம் என்பது உடம்பு, அவ்வுடம்புக்கு முதலாய் உள்ள பூதங்கள் - மண், நீர், தீ, வளி, விண் எனவும்,

''மண்ணுட னீர்நெருப்புக் கால்வான மென்றிவைதா
மெண்ணிய பூதங்க ளென்றறிந்து - நண்ணிய
மன்னர்க்கு மண்கொடுத்து மாற்றார்க்கு விண்கொடுத்த
தென்னவர் கோமாளே தெளி''.

மண் – செறிதல் /அடங்குதல்/ இறுகுதல், நீர் – நெகிழ்தல்/ பிரித்தல்/ தளர்த்தல், தீ – தெறுதல்/ சுடுதல்/ அழித்தல், காற்று - ஓரிடத்தும் நிலைபெற்று நிற்காது, ஆகாயம்- உருவற்றது எனும் குணங்களை உடையது என அறியலாம்.

''செப்பிய பூதங்கள் சேர்ந்தோர் குறியன்றே
யப்பரிசு மண்ணைந்து நீர்நாலா - மொப்பரிய
தீயாகின் மூன்றிரண்ட காற்றம் பரமொன்று
வேயாருந் தோளி விளம்பு''.

என்ற அடிகளால் மண், நீர், தீ, காற்று, விண் முறையே ஐந்து, நான்கு, மூன்று, இரண்டு, ஒன்று என்ற பயன்களை உடையது என்றும்,

''மெய்வாய்கண் மூக்குச் செவியெனப் பேர்பெற்ற
வைவாயு மாயவற்றின் மீதடுத்துத்-துய்ய

சுவையொளி யூறோசை நாற்றமென் றைந்தா
லவைமுதற் புற்கல மாம்''.

பூதங்கள் ஐந்தும் முறையே மண் உடலாகவும், நீர் வாயாகவும், தீ கண்ணாகவும், காற்று மூக்காகவும், ஆகாயம் செவியாகவும் நின்று ஐம்பொறிகளை உருவாக்கியது. மண்ணால் ஊறு என்னும் தொடு உணர்வை தரும் உடம்பும், நீரால் சுவை உணர்வை தரும் நாவும், தீயால் ஒளி என்னும் பார்வை உணர்வை தரும் கண்களும், காற்றால் மணம் என்னும் உணர்வை தரும் மூக்கும், விண்ணால் ஓசை என்னும் கேட்டல் உணர்வைத் தரும் காதுகளும் சேர்ந்து ஐம்புலன்களை உருவாக்கியது.

''பசிகோம்பு மைதுனங் காட்சிநீர் கேட்கை
தெசிகின்ற தீக்குணமோ ரைந்து-மொசிகின்ற
போக்கு, வரவுநோய் கும்பித்தன் மெய்ப்பரிசம்
வாக்குடைய காற்றின் வகை''.

''ஓங்கும் வெகுளி மதமான மாங்கார
நீங்கா வுலோப முட னிவ்வைந்தும்-பாங்காய
வண்ண முலைமடலாய் வானகத்தின் கூறென்றா
றெண்ணி மிக நூலுணர்ந்தோ ரெண்''.

மண்ணின் பகுதி நரம்பு, இறைச்சி, என்பு, மயிர், தோல், என ஐந்தாகும். நீரின் பகுதி நீர், மூளை, சுக்கிலம், நிணம், உதிரமாகும். தீயின் குணம் பசி, சோம்பல், மைதுனம், காட்சி, நீர்வேட்கையாகும். காற்றின் குணம் போக்கு, வரவு, நோய், கும்பித்தல், பரிசமாகும். ஆகாயத்தின் குணம் வெகுளி, மதம், மானம், அகங்காரம், உலோபமாகும். இப்பூதகுணம் இருபத்தைந்தும் கொண்டு உடம்பானது என்றும் விளக்குகிறது.

தசநாடிகள் பற்றிய குறிப்புகள்

"இடைபிங் கலைசுழுனை காந்தாரி யத்தி
புடைநின்ற சிங்குவை சங்கினி - பூடாவோ
டங்குரு கன்னி யலம்புடை யென்றுரைத்தார்
தங்குதச நாடிக டாம்"

- அரங்கேற்று காதை

நாடிகள் எழுபத்தீராயிரத்திலும் தசநாடிகள் பிரதானமாகும். இடகலை, பிங்கலை, சுழுமுனை, சிகுவை, புருடன், காந்தாரி, அத்தி, அலம்புடை, சங்கினி, குகு ஆகியன தசநாடிகள் என இப்பாக்கள் குறிக்கிறது.

தசவாயுக்கள் பற்றிய குறிப்புகள்

"ஒப்பார் பிராண னபான னுதானனுடன்
தப்பா வியானன் சமானனே- இப்பாலும்
நாகன் றனஞ்சயன் கூர்மன் கிருகரன்
தீதிலாத் தேவதத் தனே"

இப்பாக்கள் தசவாயுக்களான பிராணன், அபானன், உதானன், வியானன், சமானன், நாகன், கூர்மன், கிருகரன், தேவதத்தன், தனஞ்சயன் என்பதை உணர்த்துகிறது

''இடைபிங் கலையிரண்டு மேறும் பிராணன்
புடைநின் றபானன்மலம் போக்கும் - தடையின்றி
யுண்டனகீ ழாக்கு முதானன் சமானனெங்குங்
கொண்டறியு மாறிரதக் கூறு''.

எனவும்,

''கூர்ம னிமைப்புவிழி கோணாகன் விக்கலாம்
பேர்வில் வியானன் பெரிதியக்கும் - போர்மலியுங்
கோபங் கிருகரனாங் கோப்பி னுடம்பெரிப்பத்
தேவதத்த னாகுமென்று தேர்''.

எனவும்,

''ஒழிந்த தனஞ்சயன்பே ரோதி லுயிர்போய்க்
கழிந்தாலும் பின்னுடலைக் கட்டி - யழிந்தழிய
முந்நா ளுதிப்பித்து முன்னியவான் மாவின்றிப்
பின்னா வெடித்துவிடும் பேர்ந்து''

எனவும் சிலப்பதிகாரம் அரங்கேற்று காதையில் மேற்கோள்காட்டப்படுகிறது.

அபானவாயு மலமூத்திரங்களை வெளியேற்றும். உதானன் கண்டத்தானத்தில் நிற்கும். வியானவாயு உறுப்புகளை நீட்டவும் மடக்கவும் செய்யும். சமான வாயு அறுசுவைகளையும், தண்ணீர், அன்னம் ஆகியவற்றையும் சமப்படுத்தி உடலில் சேரும்படி செய்யும். கூர்மன் இமைப்பும் விழிப்பும் உறக்கமும் உணர்ச்சியும் பண்ணும், நாகன் எல்லாக் கலைகளையும் கற்கும்படி அறிவை எழுப்பும். கிருகரன் பசி, தும்மல், இருமல் உண்டாக்கும், தேவதத்தன் அயர்ச்சி, கோபம் உண்டாக்கும், தனஞ்சயன் என்பது உடம்பிலிருந்து உயிர் நீங்கிய பின்பு மூன்றாவது நாளில் தலை வெடித்த பின் தான் போகும்.

ஆதாரங்கள் பற்றிய குறிப்புகள்

''துய்ய வுடம்பளவு தொண்ணுற்றா றங்குலியா
மெய்யெழுத்து நின்றியங்க மெல்லத்தான்-வையத்
திருபாலு நாற்பதோ டேழ்பாதி நீக்கிக்
கருவாகு மாதாரங் காண்''.
''ஆதாரம் பற்றி யசைவ முதலெ ழுத்து
மூதார்ந்த மெய்யெழுத்து முன்கொண்டு-போதாரு
முந்தி யிடைவளியா யோங்குமிடை பிங்கலையால்
வந்துமே லோசையாம் வைப்பு''.

- அரங்கேற்று காதை

சரீரத்தின் அளவு தன் கையால் தொண்ணூற்றாறு அங்குலம், இதனுள் மேலே நாற்பத்தேழரையங்குலமும் கீழே நாற்பத்தேழரையங்குலமும் விட்டு நடுநின்ற ஓரங்குலம் மூலாதாரம். இதன் மேலே நான்கு விரல் விட்டு மற்ற ஆதாரங்கள் இயங்குகின்றன.

உயிர்களின் தோற்றம் பற்றிய குறிப்புகள்

"பூத வகைகள் ஓர்ஐந்தாய் பொறிஐந்தாய்
வாதனை ஓர்ஐந்தாய் மாருதமும் – மேதகுசீர்ப்
பத்தாகும் நாடிகளும் பத்தாகும் பாரிடத்தே
முத்திக்கு வித்தாம் உடம்பு"

- அரங்கேற்று காதை

ஐம்பூதங்களும், ஐம்பொறிகளும், தசவாயுக்களும், தசநாடிகளும், பரிணமித்துச் சுக்கில சுரோணிதங்களால் உடம்புகொண்டு இருவினையும் தன்னகத்தடக்கி உயிர் பிறக்குமென்று அரங்கேற்றுகாதையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அறம் பற்றிய குறிப்புகள்

ஊர்காண்காதையில்

"அறத்துறை விளங்கிய வறவோர் பள்ளியும்
மறத்துறை விளங்கிய மன்னவன் கோயிலும்"

அறம் இரு வகைப்படும், அவை இல்லறம், துறவறம். இல்லறம் என்பது மனைவியோடு இல்லின் கண் இருந்து செய்யும் அறம். துறவறமாவது "நாகம் தோலுரித்தாற் போல அகப்பற்றும் புறப்பற்று மற்று இந்திரியவசமறுத்து முற்றத்துறத்தல்" அதாவது படநாகம் தோல் உரித்தாற் போல அகமும்புறமும் துறக்க வேண்டும் என்றும். மேலும் அவற்றின் துறைகள் சரியை, கிரியை, யோகம் ஞானம் என்பதையும் விளக்குகிறது.

எண்வகைசித்தி பற்றிய குறிப்புகள்

"பொய்கொலை களவே காமம் பொருணாசை
இவ்வகை யைந்து மடக்கிய தியமம்" எனவும்,
''பெற்றதற் குவத்தல் பிழம்புநனி வெறுத்தல்,
கற்பன கற்றல் கழிகடுந் தூய்மை,
பூசனைப் பெரும்பய மாசாற் களித்தலொடு,
பயனுடை மரபி னியம மைந்தே" எனவும்,
"நிற்ற லிருத்தல் கிடத்த னடத்தலென்,
றெத்த நான்கி நிலைமையொ,
டின்பம் பயக் குஞ் சமய முதலிய,
வந்தமில் சிறப்பி னாசன மாகும்" எனவும்,
"உந்தியொடு புணர்ந்த விருவகை வளியுந்

*தந்த மியக்கந் தடுப்பது வளிநிலை"* எனவும்,
*"பொறியுணர் வெல்லாம் புலத்தின் வழாமை,*
*யொருவழிப் படுப்பது தொகை நிலை யாமே"* எனவும்,
*''மனத்தினை யொருவழி நிறுப்பது பொறைநிலை"* எனவும்,
*"நிறுத்திய வம்மன நிலைதெரி யாமற,*
*குறித்த பொருளொடு கொளுத்து வது நினைவே"* எனவும்,
*"ஆங்னனங் குறித்த அம்முதற் பொருளொடு*
*தான்பிற னாகாத் தகையது சமாதி"*

*சிலப்பதிகாரத்தில் எண்வகைசித்திகள் பற்றி எடுத்துரைக்கிறது. இயமம், நியமம், ஆசனம், பிராணாயாமம், பிரத்தியாகாரம், தாரணை, தியானம், சமாதி முதலிய எட்டு வகையான யோகங்கள் மூலம் எண்பெருஞ் சித்திகளை பெற்றவர்கள் சித்தர்கள் ஆவர்.*

*ஓமாலிகை*

*பழங்காலத்தில் மக்கள் தோல் மற்றும் கூந்தல் பாதுகாப்பிற்கு இயற்கை தந்த மூலிகைகளை வெளிப் பூச்சாகவும், அவற்றை நண்ணீரிலிட்டு குளித்தும் வந்தனர். மாதவி தன் மேனியில் ஓமாலிகை என்னும் மருத்துவக் குணமுள்ளதும், மேனிக்கு மணமூட்டுவதுமான பொருளை கொண்டு ஒப்பனை செய்துகொண்டாள் என்று சிலப்பதிகாரம் குறிப்பிடுகிறது.*

*''பத்துத் துவரினும், ஐந்து விரையினும்,*
*முப்பத்து-இரு வகை ஓமாலிகையினும்,*
*ஊறின நல் நீர், உரைத்த நெய் வாச,*
*நாறு இருங் கூந்தல் நலம் பெற ஆட்டி-*
*இலவங்கம் பச்சிலை கச்சோல மேலம்,*
*குலவி நாகணங் கோட்டம் - நிலவிய,*
*நாக மதாவரிசி தக்கோல நன்னாரி*
*வேகமில் வெண்கோட்ட மேவுசீர் - போகாத,*
*கத்தூரி வேரி யிலாமிச்சங் கண்டில்வெண்ணெய்,*
*ஒத்தகடு நெல்லி யுயர்தான்றி - துத்தமொடு,*
*வண்ணக்கச் சோல மரேணுக மாஞ்சியுடன்,*
*எண்ணுஞ் சயிலேக மின்புழுகு - கண்ணுநறும்,*
*புன்னை நறுந்தாது புலியுகிர் பூஞ்சரளம்,*
*பின்னு தமாலம் பெருவகுளம் - பன்னும்,*
*பதுமுக நுண்ணேலம் பைங்கொடு வேரி,*
*கதிர்நகையா யோமாலி கை"*

- கடலாடு காதை

*நாவல் அல்லது பூவந்தி, கடுக்காய், நெல்லிக்காய், தான்றிக்காய், ஆல், அரசு, அத்தி, இத்தி, முத்தக்காசு அல்லது கருங்காலி, மாந்தளிர், என்னும் பத்துத் துவர்ப்பு மருந்துப் பொருளும்; கோட்டம், துருக்கம், தகரம், அகில், சந்தனம் என்னும் ஐவகை நறுமணப் பொருளும்; இலவங்கம், பச்சிலை, கச்சோலம், ஏலம், நாகணம் (நேர்வாளம்), கோட்டம், நாகம் (சிறுநாகப்பூ), மதாவாரிசி, தக்கோலம், நன்னாரி, வெண்கோட்டம், கத்தூரி, வேரி, விலாமிச்சம், கண்டில் வெண்ணெய், கடுக்காய், நெல்லிக்காய், தான்றிக்காய், துத்தம், கச்சோலம், அரேணுகம் (வால் மிளகு) , மாஞ்சி (சடாமாஞ்சில்), சயிலேகம், புழுகு, புன்னை, நறுந்தாது, புலியுகிர், சரளம், தமாலம் (வெற்றிலைக் கொடி), வகுளம் (மகிழ்), பதுமுகம், நுண்ணேலம், கொடிவேலி என்னும் முப்பத்து இரண்டு வகை ஓமாலிகையினால் பதப்படுத்தப்பட்ட நன்னீரில் குளித்து கூந்தலை நறும்புனலில் உயர்த்திவிட்டுக் கஸ்தூரிக் குழம்பைத் தடவி மணங்கமழும் கரிய கூந்தலை முடிப்பர் என்றும் குறிப்பிடுகிறது. இம்மருந்து சரக்குகள் உரமாக்கி, உடற்றேற்றி, அழுகலகற்றி, குளிர்ச்சியுண்டாக்கி, நாற்றமகற்றி ஆகிய செய்கைகளுடையதால் பெரும்பாலும் சித்த மருத்துவத்தில் பயன்பட்டு வருகிறது.*

*முடிவுரை*

*சித்த மருத்துவமும் தமிழ் வரலாறும் ஒன்றுக்கொன்று பிரிக்க முடியாதது. கல்தோன்றி மண் தோன்றா காலத்தே முன் தோன்றிய மூத்த மொழி தமிழ் மொழி. சித்த மருத்துவத்தின் அனைத்து கோட்பாடுகளும் தமிழ் மொழியிலேயே உள்ளது. எனவே சித்த மருத்துவத்தின்*

*தொன்மையை தமிழ் மொழியின் தொன்மையோடு ஏறத்தாழ ஒப்பிட்டுக் கூறலாம். தமிழ் மொழியின் வரலாற்றில் மூன்று தமிழ் சங்கங்கள் குறிப்படப்படுகிறது. முதலாம் தமிழ்ச்சங்கமும் இரண்டாம் தமிழ் சங்கமும், அதில் ஏற்றப்பட்ட அனைத்து நூல்களும் லெமூரியா கண்டத்துடன் அழிந்து பட்டுவிட்டது. மூன்றாம் தமிழ்ச் சங்கம் பற்றிய குறிப்புகளும், அதில் இயற்றப்பட்ட தொல்காப்பியம் மட்டுமே இன்றளவும் காணப்படுகிறது. தொல்காப்பியம் முழுவதும் சித்த மருத்துவத்தின் கோட்பாடுகளை பரக்கக் காணலாம். முதல் மற்றும் இரண்டாம் தமிழ் சங்கத்தில் இயற்றப்பட்ட நூல்கள் கிடைத்தால் சித்த மருத்துவத்தின் கோட்பாடுகளும் அதன் தொன்மையையும் இன்னும் தெளிவாக அறிய முடியும். ஆனால் அவை அழிந்து பட்டு விட்டதனால் தற்போது தொல்காப்பியத்தில் இருந்து நாம் சித்த மருத்துவத்தின் தொன்மையை கணக்கிட எடுத்துக் கொள்ளலாம். சித்த மருத்துவத்தின் தோற்றம் அளவிட முடியாத அளவு பழமையானதாக இருந்த போதிலும், ஐம்பெரும் காப்பியமான சிலப்பதிகாரத்தில் சித்த மருத்துவத்தின் கோட்பாடுகளும் அதற்கான சான்றுகளும் உள்ளன என்பதை விளக்கமுற்படுவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்*

*சிலப்பதிகாரத்தில் புகைப்போடும் பொருட்கள், கூந்தலுக்கு நிறமூட்டும் நன்னீர், ஒவ்வொரு பெரும்பொழுதிலும் பயன்படும் ஒப்பனை பொருட்களில் (ஓமாலிகை) சேரும் பல மூலிகைகளைப் பற்றிய குறிப்புகள் உள்ளது. இவைமட்டும் இல்லாமல் கடல்படுபொருள்கள், அணிகலன்களாகப் பயன்படும் நவ மணிகளின் பிறப்பிடம், சாதி, வருணம், குணம், குற்றம், மருத்துவ பயன்கள் பற்றிய குறிப்புகளும் கிடைக்கப் பெற்றுள்ளது. இவைகள் பல சித்த மருத்துவ புத்தகங்களிலும் இடம் பெற்று உள்ளது. தமிழ் இலக்கிய வரலாற்றில் வீரயுகத்தை அடுத்துத்தான் காப்பியகாலம் தோற்றம் பெற்றது. இக்காப்பிய வளர்ச்சிக்கு வித்திட்டது இளங்கோவடிகளின் சிலப்பதிகாரம். சித்தமருத்துவம் பல ஆயிரம் ஆண்டிற்கு முன் தோன்றியது யாவரும் அறிந்ததே. எனினும் காப்பியத்தோடு தொடர்புப் படுத்தும் பொழுது தற்கால ஆராய்ச்சிக்கும் வரலாற்று ஆராய்ச்சிக்கும் வித்திடும் என்ற நோக்கத்தோடு ஆரம்பிக்கப்பட்டது இக்கட்டுரை. அடியார்க்கு நல்லார் உரை முழுவதும் கிடைக்கவில்லை. 19 வது காதையாகிய ஊர்சூழ்வரி வரை நல்லாரின் உரை கிடைத்துள்ளது, அதாவது புகார்க் காண்டம் தொடங்கி மதுரைக்காண்ட இறுதி வரை எழுதியதற்கானக் குறிப்பு கிடைத்துள்ளது. அவ்வாறு முழுவதும் கிடைக்கநேர்த்தால் சித்த மருத்துவத்தின் பல குறிப்புகள் கிடைக்கப் பெற்றிருக்கலாம். எனவே இக்கட்டுரையின் மூலம் சிலப்பதிகார காலப்பின்னணியில் சித்தமருத்துவத்தின் அடிப்படைத் தத்துவங்கள் பயன்பாட்டில் இருந்து வந்துள்ளது தெளிவாகின்றன.*

*பார்வை நூல்கள்*


1. *சாமிநாதையர், உ..வே. இளங்கோவடிகள் அருளிச் செய்த சிலப்பதிகார மூலமும் அரும்பதவுரையும் அடியார்க்குநல்லாருரையும், கமர்ஷியல் அச்சுக்கூடம், சென்னை, இரண்டாம் பதிப்பு, 1920.*
2. *திருகூடசுந்தரம் பொ. எம்.ஏ., பி. எல்., சிலப்பதிகாரம், அண்ணாமலை பல்கலைக் கழகம், முதல் பதிப்பு, 1967.*
3. *மரு. உத்தமராயன், க.சு. எச்.பி. ஐ. எம்., சித்த மருத்துவாங்கச் சுருக்கம், இந்திய மருத்துவம்-ஓமியோபதித் துறை, சென்னை , மூன்றாம் பதிப்பு, 2003.*
4. *மரு. உத்தமராயன், க.சு. எச்.பி. ஐ. எம்., தோற்றக் கிரம ஆராய்ச்சியும் சித்த மருத்துவ வரலாறும், இந்திய மருத்துவம்- ஓமியோபதித் துறை, சென்னை ,ஐந்தாம் மரு அச்சு, 2010.*
5. *மயிலை சீனி வேங்கடசாமி, ஆய்வுக் களஞ்சியம்,தமிழக ஆவணங்கள் மறந்து போன தமிழ் நூல்கள், இளங்கனி பதிப்பகம், சென்னை -600017*
6. *வைத்திய இரத்தினம். முருகேச முதலியார், க.ச, குணப்படம்- மூலிகை வகுப்பு, இந்திய மருத்துவம் மற்றும் ஓமியோபதித்துறை, 2006*
7. *ஜெகத்நாதன், பொ. அடியார்க்கு நல்லார் வரலாற்று ஆராய்ச்சி, விவேகானந்தா அச்சுக்கூடம் , எக்ஸெஸ்ஸியர் பவர் அச்சுக்கூடம், மதுரை, முதல் பதிப்பு, மார்ச்சு, 1944.*********   *********


********** ********* ********* ********** ********** **********